**JAMAL MOHAMED COLLEGE (Autonomous),**

**Tiruchirappalli - 620 020.**

**CENTRE FOR ISLAMIC TAMIL CULTURAL RESEARCH**

**2020-2021 Activities**

In our College, Centre for Islamic Tamil Cultural Research has been involving in publishing books on the Muslims Cultural History of in Tamilnadu through research. The Centre has published five books till now. Further research activities are going on. The following activities are carried out in the academic year 2020-2021.

1. Founders' Day celebration of our college was conducted through online on 11.07.2020. Our illustrious Alumni, **Member of Parliament of Perambalur** constituency and the founder of SRM Group of Institutions **Mr. T.R.Pariventhar** offered the special address. The function was followed by a Kaviarangam. **Prof.Manaseegan, K.Vasanthakumar** and **Prof.K.Abdul Rahim** recited their verses.
2. A two day **International Conference on 'Muslim contribution to Education'** has been conducted through online in **association with Manonmaniam Sundaranar University and Tamilnadu Educational University on 12th and 13th of August 2020.** Special addresses have been offered by **Prof.N.Panchanatham, Vice-Chancellor**, Taminadu Educational University, **Prof. Mustafizur Rahman, Vice-Chancellor of City University, Dhaka, Bangladesh,** and **Prof. Torsten Tschacher, Muslim Culture & Society in South Asia, Freie University Berlin Germany**.
3. **Online discussion programme** was held on 19.11.2020 by gathering **Secretaries, Principals and professors of Muslim Colleges of Tamilnadu** to focus the research activities of or research centre. Principals of Six Colleges and a good number of professors actively participated in the event. Continuous efforts are being taken in this regard.
4. Through the research regarding the development of Education in Tamilnadu, it is intended to bring to fore the contribution of private Muslim Educational Institutions

and to register the contribution of the institutions run by our brotherly communities. As fore most effort a request has been sent to furnish the history of 25 such intuitions.

5. In giving awareness to the students to know the educational service of the intuitions in which they are studying, an Essay competition is planned to conduct on the title 'My College' in the private colleges of Tamilnadu.
6. An **International Conference** on **'Islamia Tamil Ilakkiyangal - A diversified view'** was held on 28.01.2021 in association with **PG and Research Dept. of Tamil of our College** and **Tamil Development centre, Sidney, Australia**. Former professor. **Dr.Ameer Ali, Mardek University, Australia, Dr.M.A.S. Habeebur Rahman, former HOD of Tamil** of our college and **Dr.J.Raja Mohamad, Director of Centre for Islamic Tamil Cultural Research** offered their special addresses.
7. Dr.J.Raja Mohamad, Director of Centre for Islamic Tamil Cultural Research of our college delivered the following speeches through online.

   1.On the title '**History of sea Trade of Tamil Muslims' conducted by Islamiya Ilakkiya Kazhakam on 18.09.2020.**

   2.On the title '**Social Justice during the Rule of Avurangaseep' conducted by Campus Front of India, Chennai, on 03.11.2020**.
8. **Dr.J.Raja Mohamad** published an article **on 'Social Justice during the Rule of Avurangaseep' in Pudiya Vidiyal Velli, Halfyearly Journal, Chennai (December 16-31) 2020**.
9. **Prof.K.Mohamed Ismail, Co-ordinator, Centre for Islamic Tamil Cultural Research of our college** delivered a speech on **"Anthropological Aspect in the works of Thoppil Mohamed Meeran" on 25.12.2020 in an online conference conducted by Islamiya Ilakkiya Kazhakam.**
10. A **Facebook Page and a Blogger** have been created under the title **'Centre for Islamic Tamil Cultural Research'.**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020.**

**இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்**

**2020-2021 நடவடிக்கைகள்**

நமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், தமிழக முஸ்லிம்களின் பண்பாட்டு வரலாற்றினைத் தொகுத்து வெளியீடுவதற்கான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ஆய்வு மையம் சார்பாக இதுவரை ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2020-2021ஆம் கல்வியாண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. நமது **கல்லூரியின் நிறுவனர்கள் நாள் விழா 11.07.2020** அன்று இணையவழியாக நடைபெற்றது. மேற்படி விழாவில் நமது கல்லூரியின் முன்னாள் மாணவர், பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் மற்றும் எஸ்.ஆர்.எம். கல்விக் குழுமத்தின் நிறுவனர் டி.ஆர்.பாரிவேந்தர் சிறப்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்றக் கவியரங்கில் கவிஞர்கள் பேராசிரியர் மானசீகன், கோ.வசந்தகுமார், பேரா. க.அப்துல் ரஹீம் ஆகியோர் கவிதை பாடினர்.
2. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம் ஆகிவற்றோடு இணைந்து **(Muslim Contribution to Education) என்ற தலைப்பில் 12,13-08-2020** ஆகிய நாட்களில் இணையவழிக் பன்னாட்டுக் கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. மேற்படி கருத்தரங்கில் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் என்.பஞ்சநாதம், பங்களாதேஷ்-டாக்கா, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் முஸ்தபிசுர் ரஹ்மான், ஜெர்மனி, பிரியி பல்கலைக்கழக (Freie University), பேராசிரியர் முனைவர் டார்ஸ்டன் சார்ஜர் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.
3. ஆய்வு மைய ஆய்வுப் பணிகளை ஒருமுகப்படுத்தும் முகத்தான் தமிழ்நாட்டில் உள்ள **முஸ்லிம் கல்லூரிகளின் செயலர், முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்ட இணையவழிக் கலந்துரையாடல் 19.11.2020** அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆறு கல்லூரிகளின் முதல்வர்களும், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் கலந்துக்கொண்டனர். இதுதொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. தமிழகத்தில் கல்வி வளர்ச்சி குறித்த இந்த மையம் மேற்கொண்டு வரும் ஆய்வில் **முஸ்லிம் தனியார் கல்வி நிறுவனங்கள்** கல்வி வளர்ச்சிக்கு அளித்துள்ள பங்களிப்பினை வெளிக்கொணர்வதோடு **சகோதர சமுதாய**

**புரவலர்களாலும் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பினையும் பதிவு செய்து** வெளியிடும் நோக்கத்துடன் **முதல் கட்டமாக** அத்தகைய கல்லூரிகளின் வரலாறு குறித்த விவரங்களை தெரிவிக்குமாறு **25 கல்லூரிகளுக்கு வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது.**

5. தமிழ்நாட்டில் தனியார் கல்லூரிகள் ஆற்றி வரும் கல்விப் பணிகள் குறித்த செய்திகள் அந்தந்த கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்கு **'எனது கல்லூரி'** என்ற தலைப்பில் **கட்டுரைப்போட்டி நடத்த திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது**.
6. **ஆஸ்திரேலியா - சிட்னி, தமிழ் வளர்ச்சி மன்றம்** மற்றும் நமது கல்லூரியின் **முதுகலைத் தமிழாய்வுத்துறையுடன் இணைந்து 28.01.2021 அன்று இஸ்லாமிய (தமிழ் இலக்கியங்கள் - பன்முகப்பார்வை)** என்ற தலைப்பில் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேற்படி கருத்தரங்கில் ஆஸ்திரேலியா மேர்டெக் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் முனைவர் அமீர் அலி, ஜமால் முகமது கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் மீ.அ.ச.ஹபீபுர் ரஹ்மான், இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய இயக்குநர் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.
7. இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் ஜெ.ராஜா முகமது,

   1.**இஸ்லாமிய இலக்கியக் கழகம் 18.09.2020** அன்று நடத்திய இணையவழி கருத்தரங்கில் **'தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.**

   2.**சென்னை கேம்பஸ் ஃப்ரண்ட் ஆப் இந்தியா - 03.11.2020** அன்று நடத்திய இணைவழிக் கருத்தரங்கில் கலந்துக்கொண்டு **'ஔரங்கசீப் ஆட்சியில் சமூக நீதி' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.**
8. **புதிய விடியல் வெள்ளி அரையாண்டு இதழ் டிசம்பர் 16-31-2020** (சென்னை) இதழில் முனைவர் ஜெ.ராஜா முகமது, **'ஔரங்கசீப் ஆட்சியில் சமூக நீதி' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டார்.**
9. **இஸ்லாமிய இலக்கியக் கழகம் 25.12.2020** அன்று நடத்திய இணையவழிக் கருத்தரங்கில் **இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் பேரா. கா.முகமது இஸ்மாயில், 'தோப்பில் முஹம்மது மீரான் படைப்புகளில் மானுடவியல் சிந்தனைகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.**

10. இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்திற்கென **Centre for Islamic Tamil Cultural Research என்ற தலைப்பில் முகநூல் பக்கம்** ஒன்றும், இதே தலைப்பில் **Blogger** ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.